# இன்று பொதுக்காலம் இருபத்தெட்டாம் ஞாயிறு

# திருவழிபாடு ஆண்டு - A

# 2023-10-15

(*இன்றைய வாசகங்கள்:*

*இறைவாக்கினர் எசாயா நூலிலிருந்து வாசகம்* 25: 6-10,23: 1-3a. 3b-4. 5. 6 ,

*திருத்தூதர் பவுல் பிலிப்பியருக்கு எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம்* 4: 12-14, 19-20,

*மத்தேயு எழுதிய நற்செய்தியிலிருந்து வாசகம்* 22: 1-14)

*திருப்பலி முன்னுரை*

*என் தலைவராகிய ஆண்டவர் எல்லா முகங்களிலிருந்தும் கண்ணீரைத் துடைத்து விடுவார்: அன்புமிக்க சகோதர சகோதரிகளே! இயேசுவே ஆண்டவர் என்னும் இனிய நாமத்தில் நல் வாழ்த்துக்கள். இன்று பொதுக்காலம் இருபத்தெட்டாம் ஞாயிறு. சாவை ஒழித்து, பசும்புல் வெளிமீது நம்மை இளைப்பாறச் செய்யும் ஆண்டவரின் சந்நிதானத்தில் ஒன்று கூடியுள்ளோம். ஆண்டவரின் அருள் நலமும் பேரன்பும் நம்மைப் புடைசூழ்ந்துவரும்: நாம் ஆண்டவரின் இல்லத்தில் நெடுநாள் வாழ இறைவன் நமக்கென்று பலவற்றை தயாரித்து வைத்திருக்கின்றார். நாம் அச்சம் அகற்றி நம்பிக்கையோடு வாழ, என்றும் இறைவன் நமக்கு அருகிருந்து நம்மை வழிநடாத்துகின்றார். வலுவும், ஆற்றலும் அளித்து அவர் நம்மைப் பாதுகாக்கின்றார். இந்த உண்மைகளை இன்றயை இறைவார்த்தைகள் உறதிப்படுத்துகின்றன. ஆகவே நாம் அனைவரும் ஆண்டவரை நம் ஆயனாக ஏற்று, அவரே நமக்கு வலுவூட்டுகின்றவர், எல்லா முகங்களிலிருந்தும் கண்ணீரைத் துடைத்து விடுபவர் என்பதை ஆழமாக விசுவசித்து அவர் காட்டும் வழியைப் பின் தொடர வரம் கேட்டுத் தொடரும் பலியில் பங்கேற்போம்.*

## விசுவாசிகள் மன்றாட்டுகள்:

*விண்ணுலகில் வீற்றிருப்பவரே! உம்மை நோக்கியே என் கண்களை உயர்த்தியுள்ளேன்.*

*பதில் : ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.*

*அன்போடு எம்மை ஆதரிக்கும் எம் இறைவா!*

*எம் திருஅவையை இந்நாள் வரை எல்லாவித இக்கட்டுகள், இடையூறுகள், பிரச்சினைகள், கட்சி மனப்பான்மை இவற்றிலிருந்து விடுபட்டு உம் விண்ணக வாழ்வைச் சொந்தமாக்கிக் கொள்ளத் திருஅவையின் அனைத்து நல்மேய்ப்பர்களுக்கும் தூயஆவியின் கொடைகளைப் பொழிந்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.*

*விருந்தின் நாயகனே இயேசுவே,*

*உலகம் தரமுடியாத இன்பங்களை, மகிழ்ச்சியை, நிறைவை நீர் ஒருவரே தருகிறீர் என்று நான் அறிவேன். இருப்பினும், உம்முடைய அன்பைச் சுவைப்பதற்கு எனக்கு நேரமில்லை. விருப்பமில்லை. உமது அழைப்பை நான் பொருட்படுத்துவதுமில்லை. அத்தகைய நேரங்களுக்காக நான் மனம் வருந்துகிறேன். இயேசுவே, உலகக் கடமைகளில் ஆழ்ந்துவிடாமல், உமது அழைப்பை ஏற்கும் அருளை எங்களுக்குத் தந்து காத்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.*

*எல்லா முகங்களிலிருந்தும் கண்ணீரைத் துடைத்துவிடும் தந்தையே!*

*வேதனைகளோடும், விரக்தியோடும், கண்ணீரோடும் வாழும் அனைவர்மீதும் மனமிரங்கி அவர்களின் துயரினை அகற்றி அவர்கள் மகிழ்சியோடும், உடல் நலத்தோடும், அமைதியோடும் விடுதலை பெற்று வாழ்ந்திடச் செய்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.*

*அருள்கொடையின் நாயகனே எம் இறைவா!*

*இக்காலத்தில் இளையோர், இளம் பெண்கள், சிறுவர், சிறுமியர் அறிவியலின் வளர்ச்சித் தான் மிகச் சிறந்தது என்று நினைக்காமல் இறைஞானமே எல்லாவற்றிலும் தலைசிறந்தது என்ற புரிந்துகொள்ளவும், காலங்களையும், யுகங்களையும் கடந்த கடவுள் நம்மோடு நம்மில் செயலாற்றுகிறார் என்பதைப் புரிந்து, இறைவார்த்தையின் ஆழத்தை அதிகமாக அறிந்துச் சொல்லாலும் செயலாலும் சான்றுபகரும் வாழ்வு வாழத் தேவையான அருளைத் தர வேண்டுமென்று இறைவா உம்மை அன்புடன் வேண்டுகிறோம்.*

*பரிவுள்ளம் உடையவரான தந்தையே இறைவா!*

*ஒவ்வொரு நாளும் உலகில் பெருகிவரும் வன்முறையின் வேர்களை அறுத்தெறிந்து, உலகில் அமைதி நிலவிடவும், உலகிற்கு நீர் கொடுத்துள்ள இயற்கை வளங்கள் அனைத்தும், பொறுப்பிலுள்ளோரால் சரியான முறையில் பகிரப்பட்டு, பராமரிக்கப்படவும் வேண்டிய மனப்பக்குவத்தையும் அவர்களுக்கு அளித்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.*

*அருட்செல்வங்களால் எங்களை ஆசீர்வதிக்கும் அன்புத்தந்தையே! எம் இறைவா!*

*கிறிஸ்துவின் வார்த்தைகளைச் செவிக்கு உணவாக உட்கொண்ட நாங்கள் மேன்மேலும் அவராகவே மாறச் செய்தருளும். எங்கள் வாழ்வில் எல்லாச் சூழ்நிலைகளிலும், சிறப்பாக எங்களது குடும்ப வாழ்க்கையிலும், கிறிஸ்துவின் மனநிலையை நாங்கள் எமதாக்கிக் கொண்டு ஒருவரையொருவர் ஏற்று, ஒன்றிணைந்து உமதருள் தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.*

*அன்புத் தந்தையே இறைவா!*

*உலகப் பற்றினால் உண்மைக் கடவுளாகிய உம்மை மறந்து வாழும் இளைஞர்கள் நீரே ஆண்டவர், நீரே கடவுள் என்பதை உணர்ந்து உம்மில் புதிய வாழ்வைக் காண மனமாற்றம் பெற வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.*

*எம் குற்றங்களையும், குறைகளையும் நினையாத எம் இறைவா!*

*எம் குடும்பங்களில் உள்ள அனைவரும் தத்தம் பணிகளை செவ்வனே செய்யவும், அதன்மூலம் தம் வாழ்வின் நிறைவை மகிழ்வாய் பெற்று உமது சாட்சிகளால் அனைவரையும் அன்புடனும் பாசத்துடனும் வாழ நடத்த தேவையான இரக்கத்தையும் பொறுமையையும் பெற்றிட வேண்டுமென்று இறைவா! உம்மை மன்றாடுகின்றோம்.*